# தவணைப் பரீட்சை, யூன்- 2015
# Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | கிறிஸ்தவம் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

➢ **சரியான விடையினைத் தெரிவு செய்து புள்ளடி இடுக.**

01) திருவிவிலியம் எழுத்தாக்கம் பெற ஆரம்பமானது
1. கி.மு. 950 இல்
2. கி.மு. 800 இல்
3. கி.பி. 100 இல்
4. கி.மு. 100 இல்
5. கி.மு. 950 - கி.பி. 100 காலப்பகுதியில்

02) திருவிவிலியம் ஏனைய நூல்களைப் போலன்றி வேறுபட்டிருப்பதற்கான முக்கிய காரணம்
1. இறைவன் வெளிப்படுத்திய இறை அனுபவத்தில் எழுதப்பட்ட இறைவார்த்தையைக் கொண்டிருப்பதாகும்.
2. இஸ்ரயேல் மக்களின் புனித வரலாற்றை எடுத்தியம்புவதாலாகும்.
3. மீட்பர் இயேசுவின் மீட்புவரலாற்றையும் அவரது வாழ்க்கை வரலாற்றையும் கொண்டிருப்பதாகும்
4. இறைவனது எண்ணங்களைத் தாங்கி, அவரது சிந்தனைகளை சாதாரண வழக்கில் தருவதாகும்
5. பழைய ஏற்பாட்டு வரலாறுகளையும், புதிய ஏற்பாட்டு வரலாறுகளையும் என இருபெரும் பகுதிகளைக் கொண்டிருப்பதாகும்

03) ✶ குலமுதுவர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதி
✶ எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மீட்டல்
✶ பாலைவனத்தில் இறைபராமரிப்பு
✶ சீனாய் உடன்படிக்கை

மேற்கூறப்பட்ட கருத்துக்களைக் கொண்டமைந்த திருவிவிலியத்தின் பகுதி
1. திருவெளிப்பாடு
2. இறைவாக்கினர்கள்
3. வரலாற்று நூல்கள்
4. ஐந்நூல்
5. இலக்கிய நூல்கள்

04) பெலிஸ்தியருக்கு எதிராகப் போரிடவும் பின்னர் அசீரியர் பபிலோனியர்களுக்கு எதிராகப் போரிடவும் இராணுவத்தளமாகப் இஸ்ராயேலர்களுக்குப் பயன்பட்டது
1. சாரோன் சமவெளி
2. செப்போலா சமவெளி
3. பெலிஸ்திய சமவெளி
4. எஸ்திரலோன் புல்வெளி
5. சமாரியப் பகுதி

05) யோசுவாவின் தலைமைத்துவத்தோடு தொடர்புடையது
1. செங்கடலைக் கடத்தல்
2. வெண்கலப்பாம்மை உயர்த்துதல்
3. எரிகோவைக் கைப்பற்றுதல்
4. மோசே மலைக்கு செல்ல மக்களை வழிநடத்தல்
5. அமலேக்கியரோடு போராடி வெற்றி பெறல்

06) சமய முக்கியத்துவத்தை எருசலேமிற்கு பெற்றுக் கொடுத்த அரசர்
1. சாலமோன் 2. சவுல் 3. தாவீது
4. ஆகாசு 5. ஏகு

07) பபிலோனியாவில் இறையன்பையும், பராமரிப்பையும் இஸ்ரயேலர் அனுபவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கிய இறைவாக்கினர்கள்
1. எரேமியா, எசெக்கியேல் 2. எசெக்கியேல், எசாயா11
3. எரேமியா, எசாயா 4. எசாயா 1, ஆமோஸ்
5. ஆமோஸ், ஓசேயா

08) கி.மு. 444ஆண்டளவில் நெகேமியாவின் தலைமையின் கீழ் எருசலேம் மதில் கட்டப்பட்டது
1. சவுல் அரசனின் காலத்தில் 2. தாவீதின் காலத்தில்
3. சாலமோனின் காலத்தில் 4. தாரியுஸ் அரசனின் காலத்தில்
5. எஸ்ரா காலத்தில்

09) எலோகிம் மரபுடன் தொடர்புடைய கூற்றுக்களில் பொருத்தமற்றது
1. இறைவனை மனித உருவில் முன் வைத்தல்
2. மிக உன்னத நிலையில் இறைவனை எடுத்துக் காட்டல்
3. இறைதூதர் வழியாகவும், கனவுகள் வழியாகவும் தொடர்பு
4. மனம் வருந்துதலும் பாவங்களுக்கு மன்னிப்பு பெறுதலின் முக்கியத்துவமும் வெளிப்படுத்துகின்றது
5. மனித அனுபவங்களிலிருந்து இறைவன் விலகி இருத்தல்

10) தொடக்கநூல் மூன்றாம் அதிகாரத்தில் குறிப்பிடப்படுவது
1. இறைவனுக்கும் மனிதனுக்குமிடையிலான உறவு முறிவடைதல்
2. இறைவன் மனிதனைப் படைத்தல்
3. இறைவன் ஏனைய படைப்புக்களை படைத்தல்
4. இறைவன் மனிதனைப் படைத்து ஏதேன் தோட்டத்தில் வாழ வைத்தல்
5. இறைவன் ஆதிப்பெற்றோரின் பிள்ளைகளைப் படைத்தல்

11) மனிதனால் நிறைவேற்ற முடியாத காரியங்கள் இறைவனால் நிறைவேற்றப்படுமென விசுவசித்தவர்
1. யோபு 2. யாக்கோபு 3. பவுல்
4. ஆபிரகாம் 5. எலிசபேத்து

12) தனது மூத்த சகோதரனின் குதிக்காலைக் கையால் பற்றிக் கொண்டு யாக்கோபு பிறந்தார். இதன் மூலம் வெளிப்படும் கருத்து
1. இறைவனின் வாக்குறுதிக்கேற்ப இரட்டைப் பிள்ளைகளாக இவர்கள் பிறந்தனர் என்பதாகும்
2. தனது சகோதரனின் இடத்தை தனதாக்கிக் கொள்ளல் என்பதாகும்
3. இரேபேக்காளுக்கு இறைவன் கூறிய படி இவர்கள் பிறந்தனர் என்பதாகும்
4. இறைவனின் வாக்குறுதி தலைமுறையாக இடம் பெறமாட்டாது என்பதாகும்
5. இறைவனின் தெரிவு தலைமுறையாக அன்று தான் விரும்பியவர்களையே தேர்வு செய்கிறார் என்பதாகும்.

13) மோசேக்கு இத்திரோ யாரைத் திருமணம் செய்து வைத்தார்?
1. லேயாவை 2. செத்துராவை 3. சிப்போராவை
4. தெபோராவை 5. செருத்தியாவை

14) இறைவனுக்கு எதிரான நாடு
1. ஆரோன் 2. செக்கேம் 3. எகிப்து
4. அசீரியா 5. ஊர்

15) மோசேயின் சகோதரி
1. லேயா 2. மிரியாம் 3. செருயா 4. லெபோனா 5. செப்போரா

16) இறைவனுடைய செய்திகளை பகிரங்கமாகப் பயமின்றி எதிர்காலப் பிரச்சினைகளைப் பொருத்தமான சூழ்நிலையில் வெளிப்படுத்தியவர்கள் இறைவாக்கினர்களாவர். இவர்களைக் குறிக்கும் கிரேக்க சொல்
1. நபி 2. மன்னீஸ் 3. ஹொரசே 4. ப்றொபேராஸ் 5. றோ ஏ

17) தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்த பொழுது மண்ணுலகு ................................. இருந்தது. இடைவெளிக்குப் பொருத்தமானது
1. உருவற்ற வெறுமையாக இருந்தது
2. ஆவியானவரால் அசைவாடிக் கொண்டிருந்தது
3. முட்களையும் முட்புதர்களையும் கொண்டதாக இருந்தது
4. மீட்பரின் வருகைக்காக காத்திருந்தது
5. இறைவனின் படைப்பிற்காக எதிர்நோக்கியிருந்தது

18) உரோமை அரசிற்கு வரி செலுத்துவதற்கு எதிரானவர்களும், மெசியாவின் வருகை இந்தப் பேரரசுகளை எல்லாம் விரட்டுவதற்கு செயற்படும் எனவும் நம்பியிருந்தவர்கள்
1. பரிசேயர் 2. சதுசேயர் 3. மறைநூலறிஞர் 4. எஸ்ஸீனியர் 5. செலோத்தேயர்

19) இயேசு இறை அரசைப் போதிக்கும் போது பயன்படுத்திய சக்தி வாய்ந்த செயல்முறையாக அமைவது
1. உவமைகள் 2. கற்பித்தல் 3. தவச்செயல்கள்
4. இரக்கச் செயல்கள் 5. புதுமைகள்

20) கிரேக்கமொழியில் "பசிலெய்யா" என்ற சொல்லின் மூலம் கற்பிக்கப்படுவது
1. "நற்செய்தி" நூல் என்பதாகும் 2. "இறையரசு" என்பதாகும்
3. "மரபுகள்" என்பதாகும் 4. "சீடர்கள்" என்பதாகும்
5. "திருச்சபை" என்பதாகும்

21) தூய மாற்கு 15:14 – 15 இன்படி தலைமைக்குருக்கள் இயேசுவைப் பிலாத்திடம் கொண்டு செல்லக் காரணம்
1. இயேசு சீசரின் ஆட்சிக்கு ஓர் அச்சுறுத்தலாக இருந்தமையாகும்
2. உரோமைக் குடிமக்களைச் சிலுவையில் அறைய சட்டத்தில் தடைவிதிக்கப் பட்டிருந்தமையாகும்.
3. மறைச்சட்டத்திற்கு ஏற்ப எவரையும் சிலுவையில் அறைய சட்டத்தில் தடை விதிக்கப் பட்டிருந்தமையாகும்.
4. இயேசு ஒரு கலகக்காரன் என்று நினைத்தமையாகும்
5. யூதமறையைப் பரப்ப கிறிஸ்துவின் போதனைகள் தடையாக இருந்தமையாகும்

22) இறையரசை அடைவதற்கான நிபந்தனை
1. அன்பு 2. மன்னித்தல் 3. தானதருமம் செய்தல்
4. மனமாற்றம் 5. போதித்தல்

23) இயேசுவின் புதுமையைக் குறிக்க செமயோன் என்னும் சொல்லைப் பயன்படுத்தும் நற்செய்தியாளர்.
1. மாற்கு நற்செய்தி 2. லூக்கா நற்செய்தி 3. யோவான் நற்செய்தி
4. மத்தேயு நற்செய்தி 5. சமநோக்கு நற்செய்தி

24) "என்னுடையதெல்லாம் உம்முடையதே. உம்முடையதும் என்னுடையதே" இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.
1. மலைப்பொழிவில்
2. இயேசுவில் வேண்டலில்
3. சமவெளிப் பொழிவில்
4. செபக்கூடத்தில் செய்த பொழிவில்
5. ஜெத்தமனித் தோட்டத்தில் செய்த செபத்தில்

25) இயேசு பாடுகளைப் பற்றி தமது சீடர்களிடமே அதிகமாகப் பகிர்ந்து கொள்வதன் நோக்கம்
1. அவர்களுடைய பணிவாழ்விலும் துன்பங்கள் ஓர் இன்றியமையாத நிலையைப் பெறும் என்று அவர்களுக்கு அறிவுறுத்துவதற்காக
2. அவர்கள் இயேசுவோடு என்றும் இருப்பவர்கள் என்பதால்
3. சீடர்கள் இயேசுவின் இன்ப துன்ப நிகழ்வுகள் எதுவாயினும் தெரிந்திருக்க வேண்டும் என்பதற்காக
4. தனக்குப் பின் தனது பணியை ஆற்றுவதற்காக சீடர்களின் மனநிலையை அறிந்து கொள்வதற்காக
5. சீடர்களின் வாழ்வில் துன்பம் ஓர் அங்கமாக இருக்க வேண்டும் என்பதற்காக

26) யூதர்களின் நாட்காட்டியின் படி வாரத்தின் முதல்நாள் என்பது
1. ஞாயிற்றுக்கிழமை 2. திங்கட்கிழமை 3. வெள்ளிக்கிழமை
4. சனிக்கிழமை 5. வியாழக்கிழமை

27) யோவான் நற்செய்தியில் மட்டும் காணப்படும் நிகழ்வு
1. இயேசுவின் திருமுழுக்கு 2. பாதம் கழுவுதல்
3. இயேசுவின் உயிர்ப்பு 4. திருமணவிருந்து உவமை
5. முடக்குவாதமுற்றவரைக் குணமாக்கல்

28) யூததலைமைச் சங்கம் விசாரணை செய்வது
1. சமூக அநீதிகளை 2. அரசியல் குற்றங்களை
3. யூதமதம் தொடர்பான குற்றங்களை 4. சமய அரசியல் குற்றங்களை
5. மத சார்பற்ற குற்றங்களை

29) யோவான் தமது நற்செய்தி நூலை எழுதியது
1. இயேசு யூதமக்களுடைய மட்டுமல்ல முழு மனித சமுதாயத்தினதும் மீட்பராக இருக்கிறார் என்பதைக் காட்டுவதற்கு
2. இயேசு உண்மையான வீரன் என்பதை உரோமைய மக்களுக்கு விளங்கச் செய்வவதற்கு
3. இயேசு இறைமகன் என்பதை ஏற்றுக் கொண்டு அதன் மூலம் வாழ்வைப் பெறும் பொருட்டு
4. இறைவாக்கினர் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மெசியா இயேசு என்பதை உறுதிப் படுத்துவதற்காக
5. ஆதிப்பெற்றோருக்கு வாக்களிக்கப்பட்ட மீட்பர் இயேசு என்பதை விசுவசிக்கும் பொருட்டு

30) பிலாத்து “நான் எழுதியது எழுதியதே” எனக் கூறக் காரணமாக அமைவது
1. தலைமைக்குருக்கள் இயேசுவின் அறிக்கையை எழுதவேண்டாம் எனக் கூறியமையாகும்.
2. நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன் என்று எழுதும் படி கேட்டுக் கொண்டதாலாகும்
3. யூதர்களின் அரசன் நான் என்று அவனே சொல்லிக் கொண்டதாக எழுதும் என்று கேட்டுக் கொண்டதாலாகும்.
4. தீர்ப்பை மாற்றி, தமது செனட் சபைக்கு தரும்படி கேட்டுக் கொண்டதாலாகும்
5. தலைமைக்குருவின் அறிக்கையுடன் ஒத்துவராத காரணத்தால் இவ்வறிக்கையை அகற்றும் படி கூறியமையாகும்.

31) முடக்குவாதமுற்றவனை இயேசு குணப்படுத்திய நிகழ்வினூடாக அன்றைய சமுதாயத்தில் வாழ்ந்த மூன்று குழுக்களுக்கு இயேசு பதில் அளித்தார். அக்குழுக்களாவன
1. பரிசேயர், சதுசேயர், மறைநூல் அறிஞர்
2. பரிசேயர், சமாரியர், சதுசேயர்
3. முடக்குவாதமுற்றவர், அவரின் நண்பர்கள், ஏரோதியர்
4. முடக்குவாதமுற்றவர், அவரின் சமுதாய மக்கள், பரிசேயர்
5. முடக்குவாதமுற்ற நோயாளி, அவரின் நண்பர்கள், பரிசேயர்

32) தூயஆவியின் மூலம் கிடைக்கும் ஒரு புதுப்பிறப்பை இயேசு உணர்த்தியது
1. நிக்கதேமுவிற்கு 2. பேதுருவிற்கு 3. மக்களுக்கு
4. திருத்தூதர்களுக்கு 5. தோமாவிற்கு

33) ஸ்லாவிக் கோத்திர மக்கள் மத்தியில் கிறிஸ்தவ மறையைப் பரப்பும் பணியை முன்னெடுத்துச் சென்றவர்கள்
1. ஆசீர்வாதப்பரும், பொனிபாசும்
2. துறவிகளான மெதோடியசும், சிறிலும்
3. குளுனி சபையினரான ஓடோவும் கியுவும்
4. புனித பத்திரிசியாரும், வல்தேசியனும்
5. பெரிய கிரகோரியாரும், அகுஸ்தினாரும்

34) நல்லதொரு வாழ்க்கை முறைக்கு நம்மை ஈடுபடுத்தும் உவமையாக அமைவது
1. வலை 2. புதையல் 3. முத்து
4. திருமணவிருந்து 5. தானாக முளைக்கும் விதை

35) புனித பவுல் கணவனுக்கும் மனைவிக்குமிடையேயுள்ள உறவு கிறிஸ்துவிற்கும் திருச்சபைக்குமிடையேயுள்ள உறவிற்கு ஒப்பிட்டுக் கூறுவது
1. கலாத்தியரில் 2. 1கொரிந்தியரில் 3. 11கொரிந்தியரில்
4. உரோமையரில் 5. எபேசியரில்

36) இறைவனுடன் தொடர்பு கொள்வதால் பெறப்படும் அவர் பற்றிய ஆழ்ந்த உண்மைகளை அறியும் ஆற்றலை விளக்கும் தூய ஆவியின் கொடைகளில் ஒன்று
1. அறிவு 2. ஞானம் 3. பேயோட்டும் ஆற்றல்
4. விசுவாசம் 5. புதுமைகள் செய்யும் ஆற்றல்

37) இயேசுக்கிறிஸ்து தமது பிதாவுக்கு சரிசமமானவர் என்றும், பிதாவோடு ஒரே பொருளானவர் என்றும் அறிக்கை செய்த சங்கம்
1. கொன்ந்தாந்திநோபிள் 2. எபேசு சங்கம் 3. ஜெருசலேம் சங்கம்
4. நிசேயா சங்கம் 5. கல்சடோன் சங்கம்

38) பெரிய சாள்ஸ் அரசன் கல்வி நிலையை முன்னேற்றுவதற்காக தனது செயலாளருடைய தலைமைத்துவத்தின் கீழ் ஒரு அறிவாளிகள் குழுமத்தை உருவாக்கினார். அச்செயலாளர்
1. நிக்கலஸ் 2. அல்குயின் 3. சிறில்
4. அத்தனாசியுஸ் 5. ஓடோ

39) பத்தாம் நூற்றாண்டில் திருச்சபையின் ஆன்மீகம் நலிவடைந்த போது கத்தோலிக்க திருச்சபை முதலாவது ஓட்டோ என்னும் ஜேர்மனிய இனத்தவரால் ஆட்சி செய்யப்படக் காரணமான திருத்தந்தை
1. திருத்தந்தை 1ம் பத்திநாதர் 2. திருத்தந்தை 12ம் பத்திநாதர்
3. திருத்தந்தை 12ம் ஜோண் 4. திருத்தந்தை 23ம் ஜோண்
5. திருத்தந்தை 2ம் ஜோண் பவுல்

40) பூமியில் வாழ்கின்ற மனிதனின் பரிணாம வரலாற்றைப் பற்றிய முழுமையான தத்துவத்தை முன் வைத்துள்ள சிந்தனையாளரான அருட்பணி ரெயாட் டீ சார்டேன்
1. அகுஸ்தினார் சபையைச் சேர்ந்தவராவார்
2. அக்குவைனஸ் சபையைச் சேர்ந்தவராவார்
3. டோமினிக்கன் சபையைச் சேர்ந்தவராவார்
4. இயேசுசபையைச் சேர்ந்தவராவார்
5. ஆசீர்வாதப்பர் சபையைச் சோந்தவராவார்

41) போர்த்துகேயர் காலத்தில் மகா ஓயாவின் வடக்குப் பகுதிகளில் பணிபுரிந்த துறவற சபையினர்
1. இயேசுசபையினர் 2. அகுஸ்தினார் சபையினர்
3. டோமினிக்கன் சபையினர் 4. பிரான்சிஸ்கன் சபையினர்
5. ஓரிற்றோரியன் சபையினர்

42) 1658இல் இலங்கைக்கு இராணுவத்திற்கு பொறுப்பாகச் செயலாற்றுவதற்காக இலங்கைக்கு வந்தவர்
1. பெர்லின் எசவ் 2. தொன் யுவான் 3. ரொறேனோ
4. பேதுரு பெர்றாவோ 5. பிலிப் பல்தேயுஸ்

43) பல்வேறு இடங்களிலிருந்து யாத்திரிகர்களை வரவழைத்து கி.பி. 1870 யூலை மாதத்தில் மடுத்திருத்தலத்தில் விழாவினை ஆரம்பித்தவர்
1. யாக்கோமே கொண்சால்வெஸ் அடிகளார்
2. புனித யோசவ்வாஸ் அடிகள்
3. பெற்றக்கீனி அடிகள்
4. தொன்யுவான் அடிகள்
5. அருட்தந்தை கிறிஸ்தோபர் பொஞ்சீன் அடிகள்

44) ஒல்லாந்தர் காலத்தில் மாணவர்கள் பாடசாலையில் கல்வியைக் கற்க வேண்டிய காலமாகக் கணிக்கப்பட்டது
1. 8 - 15 2. 5 - 15 3. 6 - 16
4. 8 - 19 5. 4 - 16

45) போர்த்துக்கேய கால கிறிஸ்வ இலக்கியமாகக் கருதப்படுவது
1. மூவிராசாக்கள் வாசப்பு, என்றிக் எம்பரதோர்
2. எருமை, நொண்டி
3. வேதகாவிய, வியாகுலப்பிரசங்கம்
4. மங்கள கீதய, ஞானசௌந்தரி
5. சந்தியோகுமாயோர் அம்மானை, ஞானப்பள்ளு

46) சகல தருமங்களிலும் முதன்மையானது
1. அன்பு 2. பொருட்களைக் கொடுத்தல்
3. பரிவு 4. பகிர்தல்
5. பிறர்நலம்

47) கொடிய தொற்றுநோய் நிலவிய போதும் எமது மறைத்தூதுப்பணியாளர்கள் இரக்கத்தின் அருஞ்செயல்களைச் செய்தனர் என்று குறிப்பிட்டவர்
1. ஆயர் மைக்கல் 2. ஆயர் பொஞ்சின் 3. ஆயர் மசனட்
4. ஆயர் சிறில் 5. ஆயர் அகஸ்டின்

48) இரண்டாம் நூற்றாண்டில் உரோமையில் குருத்துவத்தை வழங்குதல் பற்றி புனித ஹிப்பொலிற்றஸ் அடிகளார் குறிப்பிடும் நூல்
1. டிடாக்கே 2. ஹேர்மஸ் ஆயன் 3. திருத்தூதர்களின் பண்பாடு
4. சாந்தப்பரின் கடிதங்கள் 5. சும்மா தியோலோஜியே

49) எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தின் ஆசிரியர் கிறிஸ்துவின் குருத்துவப் பணியைப் பற்றி எமக்கு நினைவூட்டுகின்றார். அவ்வாசிரியர்
1. புனித யோவான் 2. புனித பவுல் 3. புனித சாந்தப்பர்
4. புனித இரணேயுஸ் 5. புனித சிறில்

50) இலங்கையில் பணிபுரியும் சமூக நலன்புரி இரக்கப்பணி நிறுவனங்களில் பொருத்தமற்றது
1. செடேக் 2. புனித வின்சட் தே பவுல்
3. கிறிஸ்தவ இளைஞர் சங்கம் 4. கிறிஸ்தவ மகளிர் சங்கம்
5. கிறிஸ்தவ நலிவுற்றோர் சங்கம்